# வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE**

**Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145**

## பேச்சும் வாய்மொழித் தொடர்பாற்றலும் - போட்டிகளுக்கான விதிமுறைகளும் வழிகாட்டல்களும் (2018)

## ஆண்டு 9, 10, 11, 12 (HSC)

## விதிமுறைகள்

1. 11ம் 12ம் வகுப்பைச் சோ்ந்த எல்லா மாணவா்களும் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் இரண்டு தலைப்புகளைத் தெரிவு செய்து தங்கள் பேச்சை ஆயத்தம் செய்தல் வேண்டும்.
2. போட்டி அன்று போட்டி ஆரம்பிப்பதற்கு அரை மணிநேரத்திற்கு முன்னா் இந்த இரண்டு தலைப்புகளில் ஒன்றைப் போட்டியாளா் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்வாா்.
3. போட்டியாளரிற்கு தன்னைப் போட்டிக்குத் தயாா்படுத்த 30 நிமிடங்கள் கொடுக்கப்படும்.
4. 11ம் 12ம் வகுப்பு போட்டியாளா்களிற்கான வாய்மொழித் தொடா்பாற்றல் (interview), போட்டி நடைபெறும் தினத்தில் மாணவா் பேசி முடித்தபின்னா் (மேடையில் நிற்கும்போதே) நடைபெறும். போட்டியாளா் தெரிவுசெய்த இரண்டு தலைப்புகளும் இதில் உள்ளடக்கப்படும்.
5. 9ம் 10ம் வகுப்பைச் சோ்ந்த எல்லா மாணவா்களும் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து அல்லது ''தாய்மொழியே வாய்மொழியாம்'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு பேச்சை ஆயத்தம் செய்தல் வேண்டும்.
6. 9ம் 10ம் வகுப்பு போட்டியாளா்களிற்கான வாய்மொழித் தொடா்பாற்றல் (interview), போட்டி நடைபெறும் தினத்தில் மாணவா் பேசி முடித்தபின்னா் (மேடையில் நிற்கும்போதே) நடைபெறும்.
7. போட்டியாளா்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீா்மானிக்கப்படும். மாணவா்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவாா்கள்.
8. போட்டி ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக பாடசாலைக்கு வந்து அடையாள இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. மாணவா்கள் தங்கள் பெயா்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது சொல்லக்கூடாது.
10. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவா், நடுவா்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசிக்காட்ட வேண்டும்.
11. மாணவா்கள் சிறிய அட்டைகளில் பேச்சைச் சுருக்கமான வகையில் எழுதி இடையிடையே பாா்த்துப் பேசமுடியும். மனனத்திற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. மாணவா்கள் தாம் எழுதிய பேச்சை அதே வகையில் ஒப்புவிக்கத் தேவையில்லை. பேச்சிலுள்ள விடயங்களைக் கிரகித்துப் பேசுதல் போதுமானதாகும்.
12. போட்டி மதிப்பீட்டுப் புள்ளி விபரம்:

| | |
|---|---|
| பாடசாலை வரவு | 10 |
| நடுவா்களின் மதிப்பீட்டுப் புள்ளி | |
| • வாய்மொழித் தொடா்பாற்றல் | 20 |
| நடுவா்களின் மதிப்பீட்டுப் புள்ளி | |
| • மேடை மரபு | 15 |
| • இலக்கணமும் உச்சரிப்பும் | 25 |
| • பேச்சுத் திறன் | 30 |

## வழிகாட்டல்கள்

1. மேடை மரபு
   - மேடைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல்.
   - குறுவட்டைகளை (சிறிய அட்டைகளை) ஒரு வழிகாட்டியாக மட்டும் பாவித்தல். குறுவட்டைகளைப் பார்த்து தொடர்ச்சியாக வாசித்தலுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
   - சபையை ஈர்க்கும் வகையில் அனைவரையும் பார்த்துப் பேசுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் நன்று.)
   - உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகள் காட்டுதல். பேச்சின் பொருளை அனுபவித்து, இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை.
   - அளவுக்கதிகமான உடல் அசைவுகள், சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.
   - தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
     (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்)

2. இலக்கணமும் உச்சரிப்பும்
   - வசனங்கள் முழுமையானவையாகவும், இலக்கணப் பிழையற்றனவாக இருத்தல்.
   - பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்.
   - தூய தெளிவான, சரியான தமிழ் உச்சரிப்பு.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகளை அறிந்து பேசுதல்.
   - பொருத்தமான முறையிற் சொற்களைப் பிரித்தல்.
   - சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்).

3. பேச்சுத் திறன்
   - சரளமான ஆற்றொழுக்கான பேச்சு.
   - தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
   - பேச்சானது தலைப்பை விளக்கும் வகையில் உரிய கருத்துக்களைக் கொண்டதாக இருத்தல்.
   - கருத்துக்களின் தெரிவும் ஒழுங்கும்.
   - பேச்சில் தலைப்புடன் தொடர்புடைய பொருத்தமான மேற்கோள்களை சரியான வகையிற் பயன்படுத்துதல். (திருக்குறள், பழமொழிகள் போன்றவை).
   - சபையோரின் கவனத்தை ஈர்த்தல்.
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்.
   - வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல்
     (உ+ம்: "அது எங்கே ?" என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)
   - வசனங்களைத் தகுந்த உணர்வுடன் பேசவேண்டும்.

4. வாய்மொழித் தொடர்பாற்றல்
   - வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி நடைபெறும் தினத்தில் போட்டி முடிந்தபின்னர் நடைபெறும்.
   - 11ம் 12ம் மாணவர்களாற் தெரிவு செய்யப்பட்ட இரண்டு தலைப்புக்களிலும் இருந்து தலா மூன்று கேள்விகள் கேட்கப்படும்.
   - வாய்மொழித் தொடர்பாற்றலில் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.
     - உரையாடும் திறன் (சரளமாக உரையாடும் தன்மை, பல விதமான வினாக்களுக்கும் திருப்தியான பதில் அளிக்கும் தன்மை, உரையாடுதல், உரையாடலை இரசித்துப் பங்குகொள்ளும் தன்மை, அத்துடன் உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகள் காட்டுதல்).

- தமிழ் மொழியில் சொல்லறிவு (சொற்களை விளங்கிக்கொள்ளும் தன்மை, தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல்).
- பொருள் உணர்ந்து கூறும் திறன் (பேச்சுப் போட்டிக்கான கருத்தை விளங்கிக் கொள்ளும் தன்மை, சொற்களைச் சரியான முறையில் பயன்படுத்தல்).
- கூச்சமின்றி பேசும் திறன். நடுவர்களைப் பார்த்து (good eye contact) தன்னம்பிக்கையுடன் உரையாடுதல்.

5. பாடசாலை வரவு

இந்த வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். இரண்டு (2) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. இரண்டு (2) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் இல்லை. எனினும், வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள, அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

## பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறை

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப் பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் எடுத்தவர்கள் மாத்திரமே பரிசில்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாவர். போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். ஒரு வகுப்பில் போட்டியில் 35 ற்கு மேல் புள்ளிகள் எடுத்த மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு கீழ் தரப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதல் 20% மாணவர்களும் 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்த மாணவர்களும். | முதலாம் பிரிவு |
| அடுத்த 20% மாணவர்களும் 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்த மாணவர்களும். | இரண்டாம் பிரிவு |
| அடுத்த 20% மாணவர்களும் 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்த மாணவர்களும். | மூன்றாம் பிரிவு |
| அடுத்த 40% மாணவர்களும் எஞ்சியுள்ள மாணவர்களில் 35 புள்ளிக்கு மேல் எடுத்த மாணவர்களும். | திறமைச் சான்றிதழ் |

போட்டிகளில் பங்குபற்றி 35 புள்ளிகளிற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் போட்டியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாணவர்களின் போட்டி முடிவுகள் அதைத் தொடர்ந்து வரும் அடுத்த தமிழ்ப் பாடசாலை நாளில் வழங்கப்படும்.